ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2118/47 - 2019 අප්‍රේල් මස 09 වැනි අඟහරුවාදා - 2019.04.09
2118/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (அ) - மாகாண சபைகள்

மாகாண சபை அறிவித்தல்கள்

ஊவா மாகாணத்தின் மாகாண சபை

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் (திருத்த) நியதிச்சட்டத்தை அனுமதித்துக்கொள்ளல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின், மாகாண சபையினால் 2019.03.14 ஆந் திகதி சம்மதிக்கப்பட்ட 2019.03.27 ஆந் திகதியுடைய ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காகவும் இத்தால் வெளியிடுகின்றேன்.

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,
செயலாளர்,
ஊவா மாகாணத்தின் மாகாண சபை,
பதுளை.

ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2019, ஏப்பிறல் 01.

1A - PG 4480 — 17 (2019/04)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஊவா மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் (திருத்த) நியதிச் சட்டம்

ஊவா மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் நியதிச் சட்டத்தை திருத்துவதற்கென விதிக்கப்பட்ட நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயரும் நடைமுறைத் திகதியும்.

01. இந்நியதிச் சட்டத்தை ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதோடு, ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் அமுலாகும்.

பிரதான நியதிச் சட்டத்தின் முன்னுரையை திருத்தம் செய்தல்.

02. இங்கு இனி வருங்காலங்களில் பிரதான நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படும், ஊவா மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச்சட்ட முன்னுரையில் "பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை" என்ற சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் முதலாம் பகுதியின் தலைப்பைத் திருத்தம் செய்தல்.

03. பிரதான நியதிச் சட்டத்தில் I ஆம் பகுதி "ஊவா மாகாணத்திற்கான பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையை ஸ்தாபித்தல்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஊவா மாகாணத்திற்காக வீதிப் போக்குவரத்து அதிகார சபையை ஸ்தாபித்தல்" எனும் சொற்களை உட்படுத்தி இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 03 ஆம் சரத்தை திருத்துதல்.

04. பிரதான நியதிச் சட்டத்தின் 3 ஆம் சரத்தின் "பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை" எனும் சொற்களை உட்படுத்தி அச்சரத்து இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (அ) சரத்தை திருத்தம் செய்தல்.

05. பிரதான நியதிச் சட்டத்தில் 6 (அ) சரத்தில் "பதினொரு அங்கத்தவர்கள் கொண்ட" எனும் சொற்களுக்குப் பதிலாக "பதின்மூன்று அங்கத்தவர்கள் எனவும் அவர்களுள்" என்பது "உத்தியோகபூர்வமற்ற அங்கத்தவர் ஐவர்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு அங்கத்தவர்கள் உத்தியோகபூர்வ அதிகாரம் பெற்ற அங்கத்தவர்கள்" எனவும் "ஆறுபேர் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள்" எனவும் என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏழு அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள்" என்ற சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டம் 6 (இ) (1) (2) பிரிவைத் திருத்தம் செய்தல்.

06. பிரதான நியதிச் சட்டத்தின் 6 (இ) (1) (2) சரத்துக்களில் "பயணிகள் போக்குவரத்து" எனும் சொற்களுக்குப் பதிலாக "போக்குவரத்து" எனும் சொற்களை உட்படுத்தி இவ் உபசரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (இ) (6) புதிய உப சரத்தை உட்படுத்தல்.

07. நியதிச் சட்டத்தில் 6 (இ) (5) ஆம் உபசரத்தைத் தவிர கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்து உட்படுத்தப் படுவதுடன், அதுவானது பிரதான நியதிச் சட்டத்தில் 6 (இ) (6) உபசரத்து என அமுலில் இருத்தல் வேண்டும்.

"6 (இ) (6) மோட்டார் வாகன பரிசோதகர்"

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (ஊ) (1) ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

08. பிரதான நியதிச் சட்டத்தில் 6 (ஊ) (1) ஆம் சரத்தின் "மூன்று நபர்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக "இரு நபர்கள்" என்னும் சொற்களை உட்படுத்தி அவ் உப பந்தி இத்தால் திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (உ) (3) ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

09. பிரதான நியதிச் சட்டத்தின் 6 (உ) (3) பிரிவை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் சரத்து உட்படுத்தப்படுகின்றது. "ஊவா மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் வீதி அனுமதிப்பத்திர உரிமையாளர்களுள் இருவர்."

10. பிரதான நியதிச் சட்டத்தில் 6 (உ) (4) (அ) (I) (II) உப பிரிவை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் உப சரத்து உட்படுத்தப்படுவதோடு, அதுவானது பிரதான நியதிச் சட்டத்தின் 6 (உ) (4) (அ) என அமுலில் இருத்தல் வேண்டும்.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (ஊ) (4) (அ) (I) (II) ஆம் உப சரத்துக்களை திருத்துதல்.

"6 (உ) (4) (அ) இலங்கைப் போக்குவரத்து அதிகார சபையின் பிராந்திய உத்தியோகத்தர் ஒருவர்."

11. பிரதான நியதிச் சட்டத்தின் "அதிகார சபை அங்கத்தவர்களுக்கிடையில்" எனும் சொற்களுக்குப் பதிலாக "அதிகார சபையின் பணிப்பாளர் குழு அங்கத்தவர்களுக்கிடையில்" எனும் சொற்களை உட்படுத்தி திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 11 (அ) புதிய உப சரத்தை உட்படுத்தல்.

12. பிரதான நியதிச் சட்டத்தின் 11 ஆம் சரத்தின் பின்பு கீழ்க் குறிப்பிடப்படும் உப சரத்து இத்தால் உட்படுத்தப் படுவதுடன், அதுவானது பிரதான நியதிச்சட்டத்தில் 11 (அ) உபசரத்து அமுலில் இருத்தல் வேண்டும்.

பிரதான நியதிச் சட்டத்தின் 11 (அ) பிரிவிற்கு உட்படுத்தல்.

"11 (அ) தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் குழு மூன்று கூட்ட அமர்வுகளில் அறிவிப்பு இன்றி வருகை தராமையால் பதவிக் காலம் நிறைவு பெறும்."

13. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (அ) உபசரத்தை இரத்துச் செய்து கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து உட்படுத்தப் படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (அ) சரத்திற்கு இடமளித்தல்.

"ஊவா மாகாணத்திற்குள் மற்றும் ஊவா மாகாணத்துடன் இணைந்து பயணிகள் மற்றும் பொருட்கள் ஏற்றிச் செல்லும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தரமான போக்குவரத்து சேவையை நடாத்திச் சென்று அது பற்றி கவனம் செலுத்துதல், ஆய்வு செய்தல், பரிசோதித்தல், அந்தந்த தேவைகளுக்கு ஏற்ப தரங்களை விதித்தல்."

14. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (இ) உபசரத்தை இரத்துச் செய்து கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து உட்படுத்தப் படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (இ) ஆவது சரத்திற்கு இடமளித்தல்.

"வெவ்வேறு கட்டணங்கள் மீது பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக வாகனமொன்றை ஈடுபடுத்துவது தொடர்பாக எவரேனும் ஒரு நபருக்கு அல்லது ஏதேனும் நிறுவனமொன்றுக்கு அதிகாரம் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று அல்லது அதுபோன்று வேறு அதிகார பத்திரமொன்றை வெளியிடுதல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் மற்றும் இரத்துச் செய்தல் பற்றிய நிபந்தனைகளை விதித்தல்."

15. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (ஈ) உபசரத்தில் "(3) ஆம் உப சரத்தில்" எனும் சொற்களுக்குப் பதிலாக "(இ) உபசரத்தில்" எனும் சொற்களை உட்படுத்தி அச்சரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஈ) சரத்தை திருத்தம் செய்தல்.

16. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஊ) உபசரத்தில் "பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர தாரரான ஒருவருக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதி போக்குவரத்து சேவைகள் அதிகார சபை அனுமதிப்பத்திர தாரரான ஒருவருக்கு" எனும் சொற்களை உட்படுத்தி இச்சரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஊ) ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

17. நியதிச் சட்டத்தின் 19 (ஊ) உபசரத்தில் "பயணிகள் சேவைகள் அனுமதிபத்திரங்களுக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை அனுமதிப்பத்திரங்களுக்கு" எனும் சொற்களை உட்படுத்தி இது திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டங்களில் 19 (ஊ) ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

18. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (எ) உபசரத்தில் "பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்றின் அதிகார சபையின் கீழ் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பேருந்து ஒன்றில்" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்றில் அல்லது அனுமதிப்பத்திர அதிகார சபையின் கீழ் வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனமொன்றில்" என்ற சொற்களை உட்படுத்தி திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (எ) பிரிவை திருத்தம் செய்தல்.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஏ) ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

19. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஏ) உபசரத்தில் "பயணிகள் சேவை அனுமதிப்பத்திர அதிகார சபை சேவையின் கீழ், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துக்களில் சாரதிகளும், நடாத்துனர்களும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரமொன்று அல்லது அதிகாரப் பத்திரமொன்றின் கீழ், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனமொன்றில் சாரதிகள், நடாத்துனர்கள், உதவியாளர்கள்" எனும் சொற்களை உட்படுத்தி அச்சரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஐ) (ஓ) சரத்தை திருத்தம் செய்தல்.

20. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஐ) (ஓ) உப பிரிவுகளில் ''பயணிகள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப் பத்திரமொன்றில்'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார பத்திரமொன்று" எனும் சொற்களை உட்படுத்தி அவ் உபசரத்து திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஔ) சரத்திற்கு இடமளித்தல்.

21. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஔ) உபசரத்தை இரத்துச் செய்து கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து இணைக்கப்படும்.

"இந்நியதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் வீதிப் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திர உரிமையாளர் ஒருவரால் அவ் அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனமொன்றில் சாரதி, உதவியாளர், பேருந்து நடாத்துனர்களாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற நபர்கள் தொடர்பாகவும், அந்த நபருடைய சேவையை ஆரம்பிக்கின்ற மற்றும் நிறைவு செய்கின்ற நேரங்கள் தொடர்பாகவும் நடாத்தி செல்ல வேண்டிய அல்லது அதிகார சபையில் சமர்ப்பிக்கக் கூடிய அறிக்கைகளை நிர்ணயித்தல்."

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ண) சரத்திற்கு இடமளித்தல்.

22. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (ண) உப சரத்தை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்துக்களை இணைப்பதன் மூலமாக அச்சரத்தை இத்தால் திருத்தப்படுவதுடன், அவ் உப சரத்துக்கள் பிரதான நியதிச் சட்டத்தில் 19 (ண) (i) மற்றும் 19 (ண) (ii) உப சரத்துக்களாக அமுலில் இருத்தல் வேண்டும்.

"19 (ண) (I) வீதிப் போக்குவரத்து சேவைகள் உரிமையாளர்களுடைய சங்கங்கள் பதிவு செய்தல், பங்களிப்பை மேம்படுத்தல், நிபந்தனைகளை விதித்தல், அவற்றுக்கு ஆலோசனை மற்றும் பொருத்தமானதென கருதப்படும் உதவிகளை வழங்குதல், சேவைகள் வழங்குதல் மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்."

"19 (ண) (II) வீதிப் போக்குவரத்து சேவைகளை நிர்வகித்தல், முறைப்படுத்தல், தர உள்ளீட்டை மேம்படுத்துவ தற்காக சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், நிபந்தனைகள் விதித்தல், ஆலோசணை வழங்குதல், பொருத்தமானதெனக் கருதப்படும் நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்."

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) (II) உப சரத்தை திருத்தம் செய்தல்.

23. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) (II) உப சரத்தில் "பயணிகள் போக்குவரத்திற்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைக்கு" எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) (III) உப சரத்தை புதிதாக இணைத்தல்.

24. பிரதான நியதிச் சட்டத்தில் 19 ஆம் சரத்தில் (த) (II) ஆம் உப சரத்திற்குப் பின்னர் கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்து உட்படுத்தப்படுவதோடு அதுவானது பிரதான நியதிச் சட்டத்தில் (த) (III) உப சரத்திற்காக அமுலில் இருத்தல் வேண்டும்.

"19 (த) (III) அனைத்து போக்குவரத்து சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுநர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பில் ஏற்படுகின்ற சிக்கல்களை தீர்ப்பதற்காக தீர்வுக்குழு ஒன்றை (விசாரணை குழு) ஸ்தாபித்தல் வேண்டும்."

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (த) உப சரத்திற்கு இடமளித்தல்.

25. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) உபசரத்தை நீக்கி கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து உட்படுத்தப்படுவதோடு, அதுவானது பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) (i) 19 (த) (ii) உப சரத்தாக அமுலில் இருத்தல் வேண்டும்.

"19 (த) I" பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களில் சேவையாற்றும் சாரதிகள், நடாத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களுக்கு ஏற்றவாறு ;

(1) சேவை உரிமைகள் ;

(2) தொழில் சார்ந்த திறமைக்கான வசதிகள், தரம் ;

(3) சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கம், மரியாதை ; மற்றும்

(4) சேவையில் ஈடுபட்டுள்ள போது பின்பற்ற வேண்டிய சீருடைகள் சின்னங்கள் குறியீடுகளை முறைப்படுத்துவதற்கான நிபந்தனைகளை விதித்தல்."

"19 (த) III வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகன சாரதிகள், பேருந்து நடாத்துநர்கள் மற்றும் உதவியாளர்களுக்காக தொழில் பயிற்சி நிறுவனமொன்றை அதிகார சபையால் ஆரம்பித்தல், வழிநடாத்தல், மேம்படுத்தல்."

26. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (ய) உபசரத்தின் பின்பு கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்தை இத்தால் உட்படுத்தப்படுவதோடு, அதனை பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ல) உப சரத்திற்காக அமுலில் இருத்தல் வேண்டும்.

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (ல) சரத்தை புதிதாக இணைத்தல்.

"19 (ல) வீதிப் போக்குவரத்து சேவைகள் சார்பில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களில் உள்ளீட்டுத் தரத்தை முன்னெடுப்பதற்காக வாகனங்களை புதுப்பித்து வழிநடாத்தும் நிறுவனங்களை அதிகார சபையால் நடாத்திச் செல்லல், வழிநடாத்தல், அச் சேவைகளை முன்னெடுப்பதற்கான கட்டணங்களை விதித்தல் மற்றும் நிபந்தனைகளை விதித்தல்."

27. பிரதான நியதிச் சட்டத்தில் 21 ஆம் சரத்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் சரத்து உட்படுத்தப்படும்.

பிரதான நியதிச் சட்டத்தில் 21 ஆவது சரத்தை திருத்தம் செய்தல்.

போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் குழுவினால் தேவையான உத்தியோகத்தர்கள் குழுவை தீர்மானிக்கப்படுவதோடு, அதனைப் போக்குவரத்து விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களின் இணக்கத்துடன் போக்குவரத்து விடயப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்களின் சிபாரிசு மற்றும் ஊவா மாகாண சபையின் முதன்மைச் செயலாளர் அவர்களுடைய சிபாரிசுகளுடன் ஊதியம் மற்றும் சேவையாளர் எண்ணிக்கை பற்றிய ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

28. பிரதான நியதிச்சட்டத்தில் 22 (1) உப சரத்தை "மேலே 22 ஆம் பந்தி" எனும் சொற்களுக்குப் பதிலாக "மேலே 21 ஆம் பந்தி" எனும் சொற்களை உட்படுத்தி அவ் உபசரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 22 (1) உப சரத்தை திருத்தம் செய்தல்.

29. பிரதான நியதிச்சட்டத்தில் 29 (அ) சரத்தில் "2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதம் (தண்டப்பணம்) அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அவ்விரண்டில் ஒரு தண்டனைக்கு உட்படுத்தல் வேண்டும்" எனும் சொற்களுக்குப்பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறையாத அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு இலகுவான ஊழியத்துடன் சிறைத் தண்டனை அல்லது அவ்விரு வகையில் ஒரு தண்டனைக்கு உட்படுத்தல் வேண்டும் அல்லது உட்படல் வேண்டும்" எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்பட வேண்டும்.

பிரதான நியதிச் சட்டத்தில் 29 (அ) பிரிவை திருத்தம் செய்தல்.

30. பிரதான நியதிச்சட்டத்தில் 29 (ஆ) சரத்தில் "2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதம் (தண்டப்பணம்) அல்லது 12 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இரண்டில் ஒன்றுக்கு உட்படுத்தல் வேண்டும்" ஆகிய சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத அபராதம் அல்லது இலகுவான ஊழியத்துடனான சிறைத் தண்டனைகளுடனான இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டில் ஒரு தண்டனைக்கு தாங்கள் இணைதல் வேண்டும்" எனும் சொற்கள் உட்படுத்தி திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 29 (ஆ) சரத்தை திருத்தம் செய்தல்.

31. பிரதான நியதிச்சட்டத்தில் 32 ஆவது சரத்து இத்தால் நீக்கப்படுவதோடு, அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் புதிய சரத்து உட்படுத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 32 ஆவது சரத்திற்கு இடமளித்தல்.

"அதிகார சபை நிதியத்திற்கான வரவுகள், அதிலிருந்து கட்டணங்களை செலுத்துதல்கள் பற்றி பொதுவான மீளாய்வுகளை மேற்கொள்ளல், இந்நிதியை சரியான முறையில் நிர்வகித்தல், கணக்கிடுதல் என்பன பற்றிய பொறுப்புகளை பொது முகாமையாளரிடம் பொறுப்பளிக்கப்படுகின்றது."

பிரதான நியதிச் சட்டத்தில் 33 ஆவது சரத்தை திருத்தம் செய்தல்.

32. பிரதான நியதிச் சட்டத்தில் 33 ஆவது சரத்தில் "பயணிகள் போக்குவரத்து சேவையை முறைப்படுத்தல்" எனும் சொற்களுக்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகளை முறைப்படுத்தல்" எனும் சொற்களை உட்படுத்தி "பேருந்து தரிப்பிடங்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக "பேருந்து தரிப்பிடங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள்" எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்படும்.

பிரதான நியதிச் சட்டத்தில் 36 ஆம் சரத்திற்கு இடமளித்தல்.

33. பிரதான நியதிச் சட்டத்தில் 36 ஆவது சரத்து இத்தால் நீக்கப்படுவதோடு, அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப் படும் புதிய உப சரத்தை இத்தால் உட்படுத்தப்படுவதோடு, அவ் உபசரத்தில் பிரதான நியதிச்சட்டத்தில் 36 (அ) மற்றும் 36 (ஆ) உப சரத்துக்கள் என அமுலில் இருத்தல் வேண்டும்.

"36 (அ) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் மாதாந்த கணக்கு அறிக்கைகளை பரிசோதிக்க வேண்டியதோடு, அடுத்தமாத முடிவிற்கு முன்பு அதிகார சபையின் பொது முகாமையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்."

"36 (ஆ) நிதியாண்டு நிறைவடைந்த பின்னர் அடுத்த ஆண்டின் மாச்சு முப்பத்தியொராம் திகதிக்கு முன்னர் வருடாந்த கணக்கு அறிக்கையை கணக்காய்வாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்."

பிரதான நியதிச் சட்டத்தில் 37 ஆம் சரத்தை இரத்துச் செய்தல்.

34. பிரதான நியதிச் சட்டத்தில் 37 ஆம் சரத்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 40 ஆம் சரத்திற்கு இடமளித்தல்.

35. பிரதான நியதிச் சட்டத்தில் 40 ஆம் சரத்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்தினை உட்படுத்தப்படும்.

"இக் கணக்கிற்காக அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் இணக்கத்தின் அடிப்படையில் அரச வங்கியில் ஒரு கணக்கினை அல்லது பல கணக்குகளை நடாத்திச் செல்ல முடியும்."

பிரதான நியதிச் சட்டத்தில் 45 ஆம் சரத்தை திருத்தம் செய்தலும், புதிய பிரிவுகளை இணைத்தலும்.

36. பிரதான நியதிச் சட்டத்தில் 45 ஆவது சரத்தை விளக்கமளித்தல்களின் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் சரத்துக்களை நீக்கி அதற்குப் பதிலாக புதிய சரத்துக்கள் இணைக்கப்படுகின்றன.

"அதிகார சபை" "மாகாண அதிகார சபை" எனும் சொற்களால் "ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை எனக் கருதப்படும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை எனக் கருதப்படும்" எனும் சொற்கள் உட்படுத்தப்படுகின்றது.

"அமைச்சர்" என்பது, "ஊவா மாகாண சபையின் அமைச்சரவையின் பயணிகள் போக்குவரத்து விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்கள் எனக் கருதப்படுகின்றது" எனும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சர்" என "ஊவா மாகாண சபையின் அமைச்சரவையின் போக்குவரத்து சேவைகள் விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களை குறிக்கின்றது" எனும் சொற்கள் உட்படுத்தப்படுகின்றது.

"அனுமதிப்பத்திரம்" "பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம்" "வீதி போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரங்கள்" எனும் பெயர்களால் ஏதேனுமொரு பெயரில் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூல சட்டத்தின் கீழ், பல்வேறு கட்டணங்கள் மீது அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் மூலம் போக்குவரத்தில் ஈடுபடுவதற்காக பேருந்து (பஸ்) ஒன்றை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரமொன்று எனக் கருதப்படுகின்றது" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனுமொரு பெயரில் பிரதான நியதிச் சட்டம் அல்லது இந் நியதிச்சட்டத்தில் கீழ் அல்லது ஏனைய எழுத்துமூலமான சட்டத்தின் கீழ் பல்வேறு கட்டணங்களின் அடிப்படையில் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி, பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்திற்கான வாகனத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமென கருதப்படுகின்றது" எனும் சொற்களை உட்படுத்தப்படுகின்றது.

"போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள்" என ஊவா மாகாணத்திற்குள் பயணிகள், பொருட்கள் அல்லது ஏனைய போக்குவரத்து சேவைகளுக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் எனக் கருதப்படும்.

"பயணிகள்" என்பது, பேருந்துக்கள், முச்சக்கர வண்டிகள், பூங்காக்களில் பார்வையாளர்கள் செல்லும் வண்டிகள் (Safary), அலுவலக சேவைகள், கைத்தொழில்கள், பாடசாலை சேவைகள் அல்லது வேறு வாகனங்களிலிருந்து கட்டணம் அறவிட்டு ஏற்றிச் செல்லும் நபர்கள் எனக் கருதப்படுகின்றது.

"பொருட்கள்" என "பயணிகள் அல்லாத வாடகை அடிப்படையில் மற்றும் கட்டணம் அறவிடும் அடிப்படையில் ஏற்றிச் செல்லும் அனைத்துப் பொருட்களும்" கருதப்படும்.

37. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி சொற்களுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் போது சிங்கள மொழிச் சொற்கள் அமுலில் இருக்கும்.

4 - 895